கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

www.newwisdomministries.com

# ஞான ஒலி



இணைய வார இதழ்

ஞானம் 5 - ஒலி 40 | 02-10-2022



## நல்லவருக்கே நிலைவாழ்வு

டபிள்யூ.பி.ஏ.சௌந்திரபாண்டியனார்

# தலையங்கம்






அருட்பணி. **சைமன் பீட்டர்**

ஞானத்தின் மீது தாகமும், பற்றும் கொண்ட ஞான ஒலி இணைய இதழின் அன்பான வாசகப் பெருமக்களே உங்களுக்கு நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்து என்னும் விண்ணக ஞானத்தின் பெயரால் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வாரம் சென்னையில் உள்ள மிகப் பிரபலமான பாண்டி அங்காடி அல்லது பாண்டி பஜாரைப் பற்றியும், அந்தப் பெயருக்குப் பின்னால் உள்ள சுவாரஸ்யமான சம்பவங்களைப் பற்றியும் அறிந்து கொள்வோம்.

இந்த அங்காடி சென்னை தி.நகரில் அமைந்துள்ளது. இதன் ஒரு பக்கம் தி.நகர், அடுத்த பக்கம் அண்ணா சலை அமைந்துள்ளது.

இந்த அங்காடி நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவராய் இருந்த திரு.சௌந்திரபாண்டியனார் என்பவரின் பெயரால் அழைக்கப்படுகின்றது. சென்னைக்கு வருகின்ற அனைவருக்கும் வாழ்வு தருகினற இடமாக இருந்தது, இன்றும் அப்படியே அது உதவுகின்றது. அங்கு உள்ள காவல் நிலையம் கூட சௌந்திரபாண்டியனார் அங்காடிக் காவல் நிலையம் என்றே அழைக்கப்படுகின்றது.

திரு.சௌந்ததிரபாண்டியனார் அவர்களின் ஆளுமைக்காகவும், அவர் தமிழ் சமூகத்திற்குச் செய்த மாபெரும் தொண்டிற்காகவும், அவரை எதிர்காலச் சந்ததியினர் மறவாமல் இருப்பதற்காகவும்தான் அவரது பெயரை இந்த அங்காடிக்கு சூட்டியுள்ளார்கள்.

முதலில் சௌந்திரபாண்டி அங்காடி என்றுதான் அழைக்கப்பட்டது. அதன்பிறகு காலப்போக்கில் அது வழுவி பாண்டி பஜார் என்று இன்று அழைக்கப்படுகின்றது.

அவர் 1893 ம் 1953ம் வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் நம் நாயகர் டபிள்யு.பி.ஏ.சௌந்திரபாண்டியன் நாடார். அவர் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு புகழ்பெற்ற தொழிலதிபர். மேலும் சிறப்பாக, அவர் நீதிக்கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார். சுயமரியாதை இயக்கத்தின் ஆதரவாளராகவும் விளங்கினார். 1920ல் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தார்.

தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்களை பரப்புவதில் அதிக அக்கறை கொண்டவராகத் திகழ்ந்தார். அதை நடைமுறைப்படுத்த சுயமரியாதைத் திருமணங்களை பிரபலப்படுத்த உழைத்தவர். அவர் செல்வாக்கு மிகுந்தவராய் இருந்ததால் 1937லிருந்து 1940 வரை நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களுக்கு அதிக நிதியுதவி செய்தார். ஆனால் தமிழக முன்னாள் அரசியல் ஆளுமை காமராஜ் அவர்களின் வளர்ச்சியினால் சௌந்திரபாண்யனாரின் செல்வாக்கு குறைந்து விட்டது.

இவ்வளவு புகழ்மிக்கவரின் தனிப்பட்ட வாழ்வில் நடந்த சில சுவையான சம்பவங்களையும், அதன்மூலம் அவரின் தனிச் சிறப்புகளின் பின் உள்ள

நற்குணங்களை அறிந்துகொள்வோம். அது நம் வாழ்விற்கும் பெரும் பலனைத்தரும்.

திண்டுக்கல்லில் உள்ள பட்டிவீரன்பட்டி என்ற ஊரில் அவருக்கு ஆயிரம் ஏக்கர் திராட்சைத் தோட்டம் ஒன்று இருந்தது. அங்கு விளைந்த திராட்சைப் பழங்கள் அதிக சுவைமிக்கதாய் இருந்தன. அதைச் சுவைத்த அன்றை மாவட்ட ஆட்சியாளர் அந்தப் பழங்களைக் கொண்டு ஒயின் தயாரித்தால் அதிக லாபம் தரும் தொழில் வாய்ப்பு உண்டு என்று அவருக்கு அறிவுரை கூறினார்.

அதன்படி அவர் தன் தோட்டத்தில் விளைந்த திராட்சைப் பழங்களைக் கொண்டு ஒயின் தயாரித்தார். அதை எடுத்துக் கொண்டு சென்று அந்த மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்தார். அதைச் சுவைத்த அவர், அது மிகச் சிறந்த ஒயின் என்று பாராட்டினார். அதை பெரிய அளவில் தயாரித்து, பெரும் வியாபாரம் செய்யலாம், அதன் மூலம் பெரும் லாபம் சம்பாதிக்கலாம் என்று திட்டம் தீட்டினார்.

முதலில் தன் தாயாரின் ஆசியையும், அனுமதியையும் பெற விரும்பி, தன் தாயிடம் சென்று தன் எதிர்காலத் திட்டத்தைப்பற்றிக் கூறினார். அவரின் தாய், ஒயின் ஒரு மது வகை. அது தமிழர்களை மதுவுக்கு அடிமையாக்கி, அவர்களையும், அழித்து, அவர்களின் குடும்பங்களையும் கண்ணீரில் தவிக்க விட்டுவிடும். ஆதலால், அதைச் செய்ய வேண்டாம். இந்த ஒயினால், பல கோடி பணம் வந்தாலும், அந்தப் பணம் நமக்கு வேண்டாம். இந்தக் காரியத்தை நீ செய்யவே கூடாது என்று கண்டிப்பாக அவர் தன் மகனிடம் கூறிவிட்டார்.

தன் தாய் தனது ஒயின் தயாரிக்கும் திட்டத்திற்கு தடைவிதித்துவிட்டாரே என்ற வருத்தத்தோடு இருந்தார். ஒருமுறை அவர் தனது காரை எடுத்துக் கொண்டு ஒரு கடைவீதிக்குச் சென்றார். அப்போது சாலையோரம் தனது காரை நிறுத்திவிட்டு அமர்ந்திருந்தார்.

அப்போது ஒரு முகமதியர், அங்கிருந்த எல்லா கடைகளுக்கும் சென்று, சாம்பிராணி போட்டு மயிலிறகால் அங்கு தூபம் இட்டு அந்தக் கடைக்காரர்களை ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் ஒரு குறிப்பிட்ட கடைக்கு மட்டும் சாம்பிராணி இடாமல் தவிர்த்ததைப் பார்த்த சௌந்திரபாண்டியனார், அந்த முகமதியரை அழைத்து எதற்காக அந்தக் குறிப்பிட்ட கடைக்கு மட்டும் சாம்பிராணி இடாமல் தவிர்த்ததன் காரணத்தைக் கேட்டார். அதற்கு அவர், ஐயா, நான் எல்லாக் கடைகளுக்கும் சாம்பிராணி இட்டு, அந்தக் கடையில் வியாபாரம் நன்றாக நடக்க வேண்டும், அவர்கள் எல்லாரும் செல்வாக்காக வாழ வேண்டும் என்று வாழ்த்திச் செபிப்பேன்.

ஆனால் அந்தக் கடையில் அவர்கள் விற்பது மது வகைகள். அவர்கள் குடி கெடுக்கும் மதுவை விற்கின்றார்கள். அவர்கள் வியாபாரம் நன்றாக இருக்க வேண்டும் என்று நான் எப்படி செபிக்க முடியும், வாழ்த்த முடியும். ஆகவேதான் அந்தக் கடைக்கு நான் எப்போதும் செல்வதில்லை என்று சொன்னாராம்.

தனது தாய் எவ்வளவு பெரிய உண்மையை, வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத் தந்துள்ளார் என்பதை அப்போது உணர்ந்தாராம். ஒயின் தயாரிக்கும் கனவை அப்போதே குப்பையில் போட்டுவிட்டாராம்.

மற்றவரை அழித்து வரும் பதவியும், பணமும், சந்தோஷமும், செல்வாக்கான வாழ்வும் அழகாகத் தோன்றும் நெருப்புத் துண்டுகள். பிற்காலத்தில் அதுவே நரகமாக மாறிவிடும். அழித்துவிடும்.

மற்றவருக்காக தன்னை இழப்பதால் வரும், இழப்பும், துயரமும் மாண்புடையவை. அது பேரானந்தத்தைத் தரும். பெருவாழ்வைத் தரும். எங்கும் அது இன்ப மயமாக்கும்.

A sacrifice to be real must cost, must hurt,
must empty ourselves.
The fruit of silence is prayer, the fruit of prayer is faith,
the fruit of faith is love, the fruit of love is service,
the fruit of service is peace.

- St. Mother Teresa of Culcutta-



# விவிலியம் அறிவோம் – 58



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## மோசே எகிப்திற்குத் திரும்புதல்

ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொண்ட மோசே எகிப்திற்குச் செல்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடுகின்றார். முதல்முதலாக தனது மாமனாரிடம் அனுமதி கேட்கின்றார். மோசே ஒரேபு மலையில் பெற்ற கடவுள் அனுபவத்தை மாமனாரிடம் பகிர்ந்து கொள்ளவில்லை; ஆனால் எகிப்தில் வாழும் தன் இனத்தவரிடம் செல்லவேண்டும்; அவர்களின் வாழ்க்கை எப்படியுள்ளது என்பதைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலை அவருக்குத் தெரிவிக்கின்றார். மோசேயின் மாமனார் எந்த மறுமொழியும் கூறாமல் உடனே அனுமதி கொடுக்கின்றார். சமாதானமாய்ப் போய் வா என அவரை அனுப்பிவைக்கின்றார். மோசே எகிப்திற்குச் செல்வது என முடிவெடுத்தபின் ஆண்டவரும் அதற்கு ஒப்புதல் அளிக்கின்றார். எகிப்திற்குத் திரும்பிப் போ; ஏனெனில் உன் உயிரைப் பறிக்கத் தேடியவர்கள் எல்லோரும் இறந்துவிட்டனர் என அவருக்குக் கூறுகின்றார். மோசே தனியாக எகிப்திற்குச் செல்ல விரும்பவில்லை; அவருடைய மனைவி மற்றும் புதல்வர்களையும் எகிப்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றார். அவர்களை ஒரு கழுதையில் ஏற்றிப் பயணிக்கின்றார். பண்டைய மேற்காசியாவில் மனிதர்கள் கழுதைகளை பயணத்திற்காகப் பயன்படுத்தினார்கள் என்பதை அறியவருகிறோம். மோசே எகிப்திற்குப் பயணிக்கையில் ஆண்டவர் அவருக்குக் கூறியதுபோல அவரது கோலையும் கையிலெடுத்துச் செல்கின்றார். மோசேயின் கையிலிருக்கும் கோல் அவரது பணி தொடங்கிவிட்டது என்பதற்கு ஆதாரமாக உள்ளது எனக்கூறலாம். எகிப்திற்குப் புறப்பட்ட மோசேயிடம் ஆண்டவர் மீண்டும் உரையாடுகின்றார். எகிப்திற்குச் சென்றபின் அவர் என்ன செய்யவேண்டும்; பார்வோனிடம் என்ன பேசவேண்டும் என்பதையெல்லாம் கூறுகின்றார்.

மோசேயின் கூற்றுக்களுக்குப் பார்வோன் செவிகொடுக்கமாட்டான். மோசே செய்யும் அரும் செயல்களும் பார்வோனின் மனத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஏனெனில் ஆண்டவர் மோசேயிடம், நான் அவன் இதயத்தைக் கடினப்படுத்துவேன். அவன் மக்களைப் போகவிடமாட்டான். நீ பார்வோனிடம், ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்; இஸ்ரயேல் என் மகன்; என் தலைப்பிள்ளை. நான் உனக்குக் கூறிவிட்டேன்; என்னை வழிபடுமாறு என் மகனைப் போகவிடு! அவனை அனுப்ப நீ மறுத்துவிட்டால் நானே உன் மகனை, உன் தலைப்பிள்ளையை வெட்டி வீழ்த்தப்போகிறேன் என்று சொல்வாய் எனக் கூறி அனுப்புகின்றார். இச்சொற்றொடர் இலக்கிய நயத்துடன் தலைப்பிள்ளைக்குரிய ஆபத்தை வெளிப்படுத்துகிறது. இங்கே மூன்று தலைப்பிள்ளைகளைப் பற்றிய செய்திகள் பரிமாறப்படுகின்றன. அவர்கள் முறையே ஆண்டவரின் தலைப்பிள்ளை இஸ்ரயேல், பார்வோனின் தலைப்பிள்ளை மற்றும் மோசேயின் தலைப்பிள்ளை. இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கையின் வழியாகக் கடவுளுடன் முதலில் உறவை ஏற்படுத்திக் கொண்டதால் ஆண்டவரின் தலைப்பிள்ளை என அறியப்படுகின்றனர். ஆண்டவரின் தலைப்பிள்ளையான இஸ்ரயேலை கடவுளை வழிபடுமாறு பார்வோன் போகவிடவேண்டும். அவர்கள் பாலைவனத்திற்குச் சென்று ஆண்டவரை வழிபடுவதற்கு பார்வோன் அனுமதிக்க வில்லையென்றால் பார்வோனின் தலைப்பிள்ளை கொல்லப்படுவான் என கடவுள் எச்சரிக்கிறார்.

மோசே தனது குடும்பத்தினருடன் பயணத்தைத் தொடங்குகிறார். அடுத்து வருகின்ற செய்தி நமக்கு அச்சமூட்டுவதாக உள்ளது. ஆண்டவர் மோசேயை வழியில் ஒரு சத்திரத்தில் எதிர்கொண்டு அவரைக் கொல்லப்பார்த்தார் என வாசிக்கிறோம். இந்தச் செய்தியை எப்படிப் புரிந்துகொள்வது? ஆண்டவர்தான் மோசேயை அழைத்து எகிப்திற்கு அனுப்புகின்றார். வழியில் அவரைக் கொல்லப் பார்க்கிறார் என்ற செய்தி ஏற்றுக்கொள்ளும் படியானதாக இல்லை. மோசே ஆண்டவரால்; அழைக்கப்பட்டவர் என்றாலும் அவர் முன்னிலையில் இரத்தப்பழி உள்ளவராகவே இருக்கிறார். வாக்களிக்கப்பட்ட நாட்டில் இஸ்ரயேல் மக்கள் குடியேறியபிறகு தவறுதலாக ஒருவரைக் கொலை

செய்தவர் தஞ்சம் புகுவதற்காக அடைக்கல நகர்கள் உருவாக்கப்பட்டன. மோசே எகிப்தியனைக் கொன்றபின் தப்பியோடி மிதியானுக்கு வந்து தஞ்சம் புகுந்தார். இப்போது அவர் தஞ்சம் புகுந்த இடத்தைவிட்டு வெளியே வருகையில் இரத்தப் பழிக்கு பதில்சொல்ல வேண்டியவராகிறார். பழைய ஏற்பாட்டில் கடவுளால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்களில் சிலர் இத்தகையச் சூழ்நிலைக்கு ஆளாவதைப் பார்க்கமுடிகிறது. உதாரணமாக, தொநூ 32:24-32 வரையுள்ள பகுதியில் யாக்கோபு கடவுளின் தூதருடன் மற்போரிடுவதைக் கூறலாம். மோசேயின் கதையிலும் யாக்கோபின் கதையிலும் ஆண்டவர் இரவு நேரத்தில் தீடிரெனத் தோன்றுகிறார். வல்லமை மிகுந்த ஒரு தீய ஆற்றலாக வெளிப்படுகிறார். தொடக்கநூலில் யாக்கோபு வாக்களிப்பட்ட நாட்டை நோக்கிப் பயணிக்கிறார். ஆனால் அவர் அந்த இடத்தை அடையுமுன் அவரது மூத்த சகோதரனான ஏசாவை எதிர்கொள்ள வேண்டும். மோசே எகிப்தில் அடிமைகளாக வாழும் இஸ்ரயேல் மக்களை விடுவிப்பதற்காகச் செல்கிறார். அவர்களை விடுவிக்குமுன் பார்வோனை அவர் எதிர்கொள்ளவேண்டும். இரண்டு நிகழ்வுகளிலும் அவர்கள் அடையவேண்டிய இடத்தை அடையுமுன் சில பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டிய அவசியம் இருக்கிறது.

இப்பாடத்தில் விருத்தசேதனத்தின் முக்கியத்துவமும் வெளிப்படுத்தப்படுகிறது. எகிப்தியர்கள் விருத்தசேதனம் செய்வதில்லை. மோசே எகிப்தில் பிறந்து வளர்ந்ததால் விருத்தசேதனம் செய்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால் இஸ்ரயேல் மக்கள் விருத்தசேதனத்தைக் கடைபிடித்தார்கள். தொநூ 17:10-14 இன் படி விருத்தசேதனம் இஸ்ரயேலர்களின் அடையாளம். உடன்படிக்கையின் சின்னம். இஸ்ரயேல் இனத்தின் ஆண் மக்களாக பல பொறுப்புகளைச் செய்வதற்கும், திருமணத்திற்கும், பாஸ்கா கொண்டாட்டத்தில் பங்கேடுப்பதற்கும் விருத்தசேதனம் கட்டாயமாகத் தேவைப்பட்டது.மோசேயும் அவரது புதல்வனும் விருத்தசேதனம் செய்யாதவர்களாக உள்ளனர். அத்துடன் முந்தைய பகுதி பார்வோனின் தலைப்பிள்ளைக்கு ஆபத்து வருவதைப் பற்றியும் பேசுகிறது. அதைத் தொடர்ந்து இப்பகுதி வருவதால் இங்கே ஆபத்தில் இருப்பது மோசே அல்ல மாறாக மோசேயின் தலைப்பிள்ளையான கெர்சோமாக இருக்கலாம்.

எனவே இந்நிகழ்வு இஸ்ரயேலின் தலைப்பிள்ளைகள் தப்புவிப்பதற்காக கொண்டாடப்படுகின்ற பாஸ்கா விழாவையும், கெர்சோமுக்குச் செய்யப்படும் விருத்தசேதனம் பாஸ்கா ஆட்டின் இரத்தத்தையும் நினைவூட்டுவதாகக்



கருதலாம். பாஸ்கா இரவின்போது கடவுளின் தலைப்பிள்ளையான இஸ்ரயேல் மீட்கப்பட்டதுபோல சிப்போராவின் செயல் அவளின் தலைப்பிள்ளையை யாவேயிடமிருந்து மீட்கிறது. இஸ்ரயேல் வாழ்வதற்காக பாஸ்கா ஆட்டின் இரத்தம் சிந்தப்படுகிறது. மோசே வாழ்வதற்காக அவரது மகன் கெர்சோனின் இரத்தம் தெளிக்கப்படுகிறது. விப 12:44, 48 இன் படி விருத்தசேதனம் செய்தவர்கள் மட்டுமே பாஸ்கா உணவில் பங்குகொள்ளமுடியும்.மோசேயும் கெர்சோமும் விருத்தசேதனம் செய்யவில்லையென்றால் இஸ்ரயேல் மக்கள் எகிப்தைவிட்டு வெளியேறுமுன் கொண்டாடப்பட்ட பாஸ்கா விழா விருந்தில் பங்கெடுத்திருக்க முடியாது.

ஆண்டவரின் திட்டப்படி, அவரால் தூண்டப்பட்டவராக, ஆரோனும் மோசேயைச் சந்திக்க பாலைவனத்திற்கு வருகிறார். இருவருக்கும் இடையில் நடக்கின்ற உரையாடலில் மோசே ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் ஆரோனுக்குக் கூறுகிறார். இருவரும் இணைந்து எகிப்திற்குச் செல்கிறார்கள். எகிப்தில் முதல் பணியாக இஸ்ரயேல் மக்களின் பெரியோர்கள் அனைவரையும் ஒன்று கூட்டுகிறார்கள். இங்கே இஸ்ரயேல் மக்களின் பெரியோர்கள் எனக் கூறப்படுபவர்கள் குலத் தலைவர்களைக் குறிக்கும். இந்தத் தலைவர்கள் மக்களை ஒன்று கூட்டுவதற்கும் அவர்களின் செயல்களை மேற்பார்வையிடுவதற்கும் அதிகாரம் கொண்டிருந்தார்கள். மோசேயும் ஆரோனும் அவர்களுடன் உரையாடுகிறார்கள். ஆரோன் மோசேயின் வாயாக இருந்து செயல்படுகிறார்.

ஆண்டவர் மோசேக்கு கூறியவை அனைத்தையும் ஆரோன் இஸ்ரயேல் மக்களின் பெரியோர்களுக்குக் கூறுகிறார். அவர்கள் முன்னிலையில் பல அரும் செயல்களையும் செய்கிறார். ஆரோன் கூறியதைக் கேட்டு, அவர் செய்த அரும் செயல்களையும் கண்ட மக்கள் அவர்களை நம்புகின்றனர். ஆண்டவர் மோசேக்கும் ஆரோனுக்கும் அளித்திருக்கும் அதிகாரத்தை ஏற்றுக்கொள்கின்றனர். ஆண்டவரைத் தொழுகின்றனர்.

அதைத்தொடர்ந்து மோசேயும் ஆரோனும் பார்வோனைச் சந்திக்கின்றனர். மோசேயும் ஆரோனும்

பார்வோனை சந்திக்கும் நிகழ்வும், பார்வோனின் எதிர்வினைகளும் காட்சிகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆறு காட்சிகளாக நாம் பார்க்கலாம்.

முதல் காட்சியில் (5:1-5) மோசேயும் ஆரோனும் பார்வோனைச் சந்தித்து, ஆண்டவர் அவர்களைச் சந்தித்ததையும், பாலைவனத்தில் அவருக்கு விழா எடுப்பதற்கு கட்டளையிட்டதையும் கூறி, அதற்காக மக்களைப் போக விட பார்வோனிடம் கேட்கின்றனர். பார்வோன் யார் அந்த ஆண்டவர்? எனக்கேட்டு அவர்களைப் போகவிட மறுக்கிறான். இந்தக் காட்சியில் மோசே ஓர் இறைவாக்கினராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். அவருடைய வார்த்தைகளும், இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைத்துள்ளார் என்று தொடங்குகிறது. பின்னால் வரக்கூடிய பெருந்துன்பங்களுடன் ஒப்பிடும்போது மோசே கேட்கும் அனுமதி சதாரணமானதுதான். ஆனால் பார்வோன் அதை மறுக்கிறான். இரண்டாவது காட்சியில் (5:6-9) பார்வோனின் எதிர்வினை வெளிப்படுகிறது. இஸ்ரயேல் மக்களின் வேலைப் பளுவை பார்வோன் அதிகரிக்கச் செய்கிறான். அவர்கள் இதுவரை அறுத்துக் கொடுத்த அளவு செங்கல் அறுத்துக் கொடுக்கவேண்டும்; ஆனால் அதற்குத் தேவையான வைக்கோலை அவர்களே சேகரித்துக் கொள்ளவேண்டும் எனக் கட்டளையிடுகிறான். செங்கல் தரமானதாக அமைவதற்கு வைக்கோல் அவசியமான ஒன்றாக இருந்தது. வேலைப் பளுவை அதிகரிப்பதன் வழியாக கடவுளைத் தொழுவதற்குப் பாலைவனத்திற்குச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தை இஸ்ரயேல் அடிமைகளின் சிந்தனைகளிலிருந்து மாற்றுவதுதான் பார்வோனின் நோக்கமாக இருந்தது.

மூன்றாவது காட்சியில் (5:10-13) அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளும் மேற்பார்வையாளர்களும் இஸ்ரயேல் மக்களின் வேலைப் பளுவை அதிகரிக்கச் செய்வதில் முனைப்போடு செயல்படுகின்றனர். செங்கல் குறையாமல் அறுப்பதற்கு அவர்களைக் கட்டாயப்படுத்துகின்றனர். இஸ்ரயேல் மக்கள் அதில் தோல்வியடைகின்றனர். வைக்கோல் கிடைக்காததால் அவர்களால் முன்புபோல் வேலையை முடிக்க முடியவில்லை.

நான்காவது காட்சியில் (14-18) தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை முழுமையாக முடிக்க முடியாததால் இஸ்ரயேல் மக்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள். அடிக்கப்படுகிறார்கள். இஸ்ரயேல் மக்களின் மேற்பார்வையாளர்களும் தண்டிக்கப்படுகிறார்கள். அவர்கள் பார்வோனிடம் முறையிட்டும் எந்தப் பலனும் இல்லை. பார்வோனின் கட்டளைப்படி அவர்கள் வைக்கோல் கொடுக்கப்படாமலே நிர்ணயிக்கப்பட்ட செங்கற்களை அறுத்துக் கொடுக்கவேண்டும்.

ஐந்தாவது காட்சியில் (5:19-21) கதை மோசேக்குத் திரும்புகிறது. அவரது முயற்சிகள் தோல்வியைத் தழுவுவதாகக் காட்டப்படுகின்றன. மோசேயின் முன்னெடுப்புகள் தங்களை இக்கட்டில் மாட்டிவிட்டதாக மேற்பார்வையாளர்கள் கருதுகின்றனர். அவர்கள் மோசேயிடமும் ஆரோனிடமும், ஆண்டவர் உங்களைக் கவனித்துக் கொள்ளட்டும்! உங்களுக்குத் தீர்ப்பு வழங்கட்டும்! ஏனெனில், பார்வோன் முன்னிலையிலும் அவனுடைய அலுவலர் முன்னிலையிலும் நம்மவர் வாடையே பிடிக்காதவாறு நீங்கள் செய்து விட்டீர்கள்! நம்மைக் கொல்வதற்கான வாளை அவர்கள் கையில் வைத்துவிட்டீர்கள் என முறையிடுகின்றனர். மோசேயின் திட்டம் இஸ்ரயேல் மக்களை மிகவும் இக்கட்டானச் சூழலில் தள்ளிவிட்டிருக்கிறது.

ஆறாவது காட்சியில் (5:22-6:1) மோசேயை மீண்டும் கடவுளுடன் சந்திக்கிறோம். மோசேயின் செயலால் இஸ்ரயேலர்களுக்கு நேர்ந்த இக்கட்டான சூழ்நிலைகளை அவர் ஆண்டவரிடம் கூறுகிறார். அவர்களை விடுவிப்பதாகக் கூறி துன்பத்திற்குள்ளாக்கியதை வெளிப்படுத்துகிறார். அவர்களை விடுவிக்க வேண்டுகிறார். மோசேயின் இச்செயல் இஸ்ரயேலின் இறைவாக்கினர்களை நம் கண்முன் கொண்டுவருகிறது. அவர்கள் கடவுளின் வார்த்தைகளை மக்களுக்குப் பறைசாற்றினார்கள்; அதே வேளையில் மக்களின் தேவைகளையும் கடவுள்முன் வைத்தார்கள். இக்காட்சியில் மோசே தனக்காக மட்டுமல்ல இஸ்ரயேல் மக்களுக்காகவும் கடவுள்முன் வேண்டுகிறார். ஆண்டவரின் பதில் (6:1) மோசேயின் வேண்டுதலை உதறித்தள்ளவில்லை. ஆனால் கடவுளின் ஆற்றலை வெளிப்படுத்தும் சிந்தனையாக உள்ளது.

பயணம் தொடரும்...

> “The giver of every good and perfect gift has called upon us to mimic Gods giving, by grace, through faith, and this is not of ourselves.”
>
> - St. Nicholas of Bari, Bishop of Myra -



# ஞாயிறு மறையுரை

## பொதுக்காலம் 27-ம் ஞாயிறு

02-10-2022

முதல் வாசகம் - அபாகூக் 1:2-3, 2:2-4
இரண்டாம் வாசகம் - 2 தீமொத்தேயு 1:6-8, 13-14
நற்செய்தி வாசகம் - லூக்கா 17:5-10

மறையுரை வழங்குபவர்



அருட்பணி. **ராபர்ட்**
உதவிப்பங்குத்தந்தை
புனித.விண்ணரசி அன்னை ஆலயம்
மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்

## இறைநம்பிக்கை

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் மனோதத்துவம் பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ். இவர் அதீத அறிவாற்றல் பெற்றவராக திதழ்ந்தார். யாரும் எதிர்பாராத வன்னமாய் 29-ஆம் வயதில் மனநிலை பாதிக்கப்பட்டவராகிறார். ஆனால் இவர் எப்பொழுதெல்லாம் தனக்கு நல்ல மனநிலை இருந்ததோ, அந்த நேரத்தில் எல்லாம் தான் பூரண குணம் அடைந்துவிட்டதாகச் சொல்லிக் கொண்டே இருந்தார். நாட்கள், ஆண்டுகள் ஆயின. நான் குணம் அடைந்து விட்டேன் என்ற நம்பிக்கை. அவர் பூரண குணமடைந்து நல்ல மனநிலையைப் பெற்றார். ஒரு விஷயத்தை நாம் எந்தளவுக்கு ஆழமாக நம்புகிறோமோ, அந்த அளவுக்கு நாம் நம்பிக்கையில் வலுப்பெற முடியும்.

சீடர்கள் இயேசுவிடம் எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும் என வேண்டுகின்றனர். அனுதினமும் இயேசுவோடு வாழ்ந்து அவரது அதிசயங்களையும், மாட்சியையும் கண்ட பின்பும் கூட சீடர்கள் நம்பிக்கைக் கொள்ள கற்றுக் கொள்ளவில்லை. அவரது வார்த்தையைக் கேட்டு அவரையே நம்பி பின்பற்றிய பின்னும் கூட, அவர்கள் நம்பிக்கையில் வளரவில்லை. பலமுறை இயேசு அவர்களது நம்பிக்கையை கடிந்துள்ளார். கடலில் புயலால் தாக்கப்பட்டபோது, ஆண்டவரே மடிந்து போகிறோம் என கூச்சலிட்டனர். சாத்தானே பின்னால் போ எனக் கூறி இராயப்பரை ஒருமுறை எச்சரிக்கிறார். உயிர்ப்பை ஏற்றுக் கொள்ளாத நம்பிக்கையற்ற சீடர்களை கடிந்து கொள்கிறார். புனித தோமாவைச் சந்தித்த உயிர்த்த இயேசு, நம்பிக்கைக்கொள், என்னை காணாமல் நம்புபவனே பேறுபெற்றவன் என அறிவுரை வழங்கினார்.

இத்தகைய நம்பிக்கையினாலே புனிதர்கள் பெரும் புதுமைகள் புரிந்துள்ளனர். புதுமை புரிய தனிவரம் பெற்ற புனித கிரகோரியார், குன்றைப் பார்த்து கடலிலே போய் விழு என்றதும் உடனே மலை பெயர்ந்து கடலில் போய் சரிந்ததாக வரலாறு கூறுகிறது. நம்மிடம் உள்ள நம்பிக்கை போதிய அளவு இருக்கிறதா, வளருகிறதா என்பதைக் குறித்து இன்று நாம் சிந்திக்க, இறைவார்த்தை வழிபாட்டால் அழைக்கப்படுகின்றோம்.

கடலிலே கப்பல் ஒன்று நிம்மதியாக சென்று கொண்டிருந்தது. திடீரென அடித்த புயலிலே கப்பல் பெருமளவு ஆடி அசைந்தது. பயணிகள் பெரும் பீதிகொண்டு அங்குமிங்குமாக ஓடினர். ஒரு சிறுவன் மட்டும் கப்பலின் மேற்தளத்தில் நிம்மதியாக விளையாடிக் கொண்டிருந்தான். கப்பல் முழுவதும் பேராபத்தில் இருக்கிறது. நாங்கள் எல்லாம் பயந்து நடுங்கும்போது நீ மட்டும் நிம்மதியாக விளையாடுகிறாயே என கப்பல் பயணி ஒருவர் அச்சிறுவனிடம் கேட்டபோது சிறுவன், என் அப்பா தான் இக்கப்பலின் ஓட்டுநர், அவர் இருக்கும் வரை எனக்கு ஒரு ஆபத்தும் நேரிடாது. அதனால்தான் எனக்கு பயமில்லை என பதில் கொடுத்தான். இச்சிறுவனிடமிருந்த இந்த களங்கமற்ற நம்பிக்கையைப் போல தான் நாம் இறைவனிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

நம்பிக்கை என்பது நாம் ஒருவர் மீது வைத்திருக்கும் பற்று. வாழ்விலும், தாழ்விலும், அவரே தமக்கு ஏக உறுதுணை என்ற நினைப்போடு அவரிலே முழுநம்பிக்கை கொண்டு வாழ்வதே நம்பிக்கை வாழ்க்கை. இப்படிப்பட்ட நம்பிக்கைதான் நமக்குத் தேவை. காணாதிருந்தும், தெரியாதிருந்தும் நம்புவதுதான் சிறந்த நம்பிக்கை. நம்பிக்கை இருள் போன்றது. இறைவன் ஒருவரையே நம்பி இவ்விருளில் புகுந்து வாழ்கின்றோம். விண்ணக ஒளியில் சேரும் வரை இவ்விருளிலே தான் நடக்க வேண்டும். திருமுழுக்கின் போது திருச்சபையிடம் நாம் பொன்னையும் பொருளையும் கேட்கவில்லை. படிப்பையும், பதவியையும் கேட்கவில்லை. ஆனால் நம்பிக்கையைக் கேட்போம். அப்படிப்பட்ட நம்பிக்கை நம்மில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்வதாக.

- ஆமென்



# பொதுக்காலத்தின் 27-ம் ஞாயிறு

அபக். 1:2-3, 2:2-4, 2 தீமோ. 1 : 1,6-8, 13-14 லூக். 17:5-10

02-10-2022




பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

ஆழமான இறை நம்பிக்கை உதவியால் துன்பங்களைக் கடந்து வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 27-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

வாழ்க்கை என்ற படகு கரைசேர நம்பிக்கை என்ற துடுப்பு அவசிய மாகிறது. நம்பிக்கை மனிதனை வாழ வைக்கிறது. அத்தகைய நம்பிக்கையை மையப் பொருளாகக் கொண்டுள்ளது இன்றைய வழிபாடு. நாம் நமது இறை நம்பிக்கையை புதுப்பித்து, அதனை மேலும் வலுவாக்க இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கிறது.

இது என்னால் முடியும் என்ற தன்னம் பிக்கை உள்ளவனால் ஒரு மலையைக் கூட பெயர்த்தெடுக்க முடியும் என்ற நம்பிக்கையை நங்கூரமாய் நம் நெஞ்சங் களில் இறக்குகிறது இன்றைய இறைவாக்கு.

துன்பத்திலும் துவண்டு விடாமல் இருந்த யோபுவுக்கு அனைத்திலும் இரு மடங்காகப் பெற்றுத் தந்தது நம்பிக்கை. ஆகட்டும் என்ற ஒற்றைச் சொல்லால் அவமானத்தைக்கூட ஆபரணமாய் மாற்றியது மரியாளின் நம்பிக்கை. அவர் சொல்வதை செய்யுங்கள் என்று சீடருக்கு ஆணையிட்டது மாதாவின் நம்பிக்கை. ஆண்டவனின் ஆடைகூட குணமாக்கும் என்பதை மெய்ப்பித்தது பெரும்பாடுள்ள பெண்ணின் நம்பிக்கை. மேசையில் இருந்து சிதறி விழும் துண்டுகளை நாய்கள் சாப்பிடுமே என்று ஆண்டவனையே அசைத்து பார்த்தது கானானியப் பெண்ணின் நம்பிக்கை. ஒரு வார்த்தை சொன்னால்போதும் என் ஊழியன் குணமடைவான் என்று சாதித்தது நூற்றுவர் தலைவனின் நம்பிக்கை. குருடர் பார்த்ததும், செவிடர் கேட்டதும், முடவர் நடந்ததும் நம்பிக்கை யால்தான்.

நம்பிக்கை ஒன்று மட்டுமே இறைவனின் வல்லமையை வெளிப்படுத்த வைக்கிறது. நம்பிக்கை ஒன்றுமட்டுமே நம் வீட்டு வாசலுக்கு கடவுளை வரவழைக்கிறது. நம்பிக்கையுடன் பயணிக்கத் தொடங்கும் போதுதான் வானம் வசப்படுகிறது. நம்பிக்கை உள்ளவனுக்கு அந்த வானமே எல்லையாகிறது. அத்தகைய நம்பிக்கையைப் பெற்று வாழ நம்பிக்கை யுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம். அசைக்க முடியாத நம்பிக்கையைப் பெற்று வாழ்வோம்.

## முதல் வாசக முன்னுரை

விசுவாசம்தான் ஒருவருடைய வாழ்வை அதன் நடைமுறைகளை சீர் செய்கிறது. ஆண்டவர்மேல் விசுவாசம் கொள்பவர் தான் என்றென்றும் வாழ்வர் என்ற நம்பிக்கை நாற்றுகளை நம் நெஞ்சத்தில் விதைக்கிறது இன்றைய முதல் வாசகம். நேர்மையுடையவர் நம்பிக்கையால் வாழ்வடைவர் என்ற ஆண்டவரின் அமுத மொழிகளை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

தன்னால் திருநிலைப் படுத்தப்பட்ட தீமோத்தேயுவுக்கு பவுலடியார் கூறும் அறிவுரைகள் இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. நற்செய்தி யின் மதிப்பீடுகள் நமது வாழ்வின் சட்டமாக வேண்டும். அதன் படிப்பினைகள் நம்மை பாதுகாக்க வேண்டும் என்பதை எடுத்து ரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) ஆயன் தன் மந்தைகளைக் காப்பது போல் எம்மைக் காத்துவரும் இறைவா, உம்மாலும், உம் தூய ஆவியின் அருளாலும் உம் திருப்பணிக்கென தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர் வதியும். நீர் வழங்கிய அருள் வரங் களால் மக்களை நல்வழிப்படுத்தி, பயனை எதிர்பாராது பணிவிடை புரியும் பக்குவப்பட்ட அருட்பணியாளராய் அவர்கள் உவப்புடன் ஊழியம் புரியவும், உடல் உள்ள நலனை பெற்று வாழவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) எம் கால்கள் இடராதபடி எம்மைப் பார்த்துக்கொள்ளும் அன்பு இறைவா, நாங்கள் எங்களது வாழ்வில் தூய ஆவியாரின் வழி நடத்தலோடு, அன்னை மரியாளின் கரம் பிடித்து பயணிக்கவும், மற்றவர்களிடமிருந்து பலனை எதிர்பார்க்காமல் நம்பிக்கை யோடு நாங்கள் எங்கள் கடமையைச் செய்யவும் உம்மில் என்றும் நம்பிக்கை யோடு வாழவும் அருள் தர வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

3) உறங்காமல், கண் அயராமல் எம்மை காக்கும் இறைவா, உம் மீது நாங்கள் கொண்ட நம்பிக்கையை மிகுதியாக்கும். காலம் கடந்தாலும் நீர் எம்மை கைவிடமாட்டீர். உம்மால் மட்டுமே எம்மை வாழவைக்க முடியும். உம்மையன்றி ஓர் அணுவும் அசையாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை யை நாங்கள் பெறவும், அந்த நம்பிக் கையின் வழியே நாங்கள் நல்வாழ்வு பெறவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) அமைதியை அருளும் அருட் கொடையே, கவலைகளால் கண்ணீர் சிந்தி, துன்பங்களால் துயர் அடைந்து, வாட்டும் நோய்களால் விரக்தி அடைந்து, நிம்மதி இழந்து தவிக்கும் எம்மை கருணையுடன் பாரும். துன்ப துயரங்களில் இருந்தும், வாட்டுகின்ற நோய்களில் இருந்தும் எம்மை பூரணமாக விடுவித்து அமைதியையும் ஆறுதலையும் தந்து ஆதரிக்க வேண்டு மாய் இறைவா உம்மை மன்றாடு கிறோம்.



### எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



**துட்ட ரோடுற வாடிநான்**
**மட்டி லாததுன் மார்க்கனாய்க்**
**கெட்டி டாவகை கிருபைசெய்**
**தட்டி லாத தயாபரா**

இறைவா! தடைகளற்ற அருள் வெள்ளமே! தீயவர்கள் நிறைந்திருக்கும் இவ்வுலகில் நான் அவர்களோடு சேர்ந்து தவறான வழியில் சென்றுவிடா வண்ணம் என் கரம்பிடித்து நீவிர்தான் நல்வழியில் செல்ல அருள் புரிய வேண்டும்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி



சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM

## குறள் -13

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி**

## குறள் விளக்கம்

மழை பெய்யாமல் பொய்க்குமானால் கடல்சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தும் பசி உள்ளே நிலைத்து நின்று உயிர்களை வருத்தும்.

## சிந்தனை

இயான் க்ரிலோப்-ன் கதையொன்று உண்டு. அதில் ஒரு சிங்கத்திற்கு அணில் ஊழியம் செய்தது. அதன் சேவகம் சிங்கத்திற்கு பிடித்திருந்தது. சில நேரங்களில் தன் கூரிய பற்களாலும், கால் நகங்களாலும் சிங்கத்தை மென்மையாக வருடி முதுகு சொறிந்து விடுவதுதான் அணிலின் பணி. சிங்கம் அதற்கு ஒரு வண்டி நிறைய சுவை மிகுந்த கொட்டைகளைத் தருவதாக வாக்களித்தது. ஆனால் உடனே தரவில்லை. காலம் பறந்தது. தன் நண்பர்கள் மரங்களில் அங்கும் இங்கும் திரிவதைப் பார்த்ததும் அதற்கு துயரம் ஏற்படும். அவை கொட்டைகளை உடைத்துச் சாப்பிடுவதைப் பார்த்தால் ஏக்கம் உண்டாகும். அது சிங்கத்திற்குச் சேவகம் புரிய விரும்பாமல் வெளியே வந்து விட முயன்ற போதும் மறுபடியும் சேவகத்திற்காக வலுக்கட்டாயமாக இழுத்து வரப்பட்டது. வயதாகி அது பணி ஓய்வு பெறும் நேரம் அதற்கு வண்டி நிறைய பழமும் உலர்ந்த கொட்டைகளும் தரப்பட்டன. அனைத்தும் மிகவும் ருசியானவை, அருமையானவை. ஆனால் அந்த அணிலோ வெகு நாட்களுக்கு முன்பே தன் பற்களை இழந்து விட்டிருந்தது.

மழைநீர் விண்ணிலிருந்து வருவதால் அது அமிழ்து என்றும், அது வந்தபின் மனிதனுக்கு உணவாகிறது என்றும் முந்தைய குறள்கள் விளக்கின. விண்ணின்று பெய்கின்ற அமிழ்தம் போன்ற மழைநீர் பொய்த்துவிட்டால் இந்த விரிநீராகிய கடல் நீரால் பயனில்லை. அதாவது, இந்த உலகம் எப்படி இயங்குகிறது, எதனால் இயங்குகிறது, யாரால் இயங்குகிறது என்று சொல்ல முடியாது. முற்றிலுமாக அதை கண்டுபிடிக்க முடியாது. ஆகவே வியப்பக்குரிய இந்த கடலால் சூழ்ந்துள்ள உலகில் மழை இல்லையேல் மனிதனை பசியால் வாட்டிவிடும் என்கிறார் வள்ளுவர். மழை பொய்த்துவிட்டது என்றால் இந்த மனிதன் உடல்பசியால் இறந்து விடுவான் என்கிறார்.

உணவு உயிருக்கு சமமானது எப்படியென்றால், 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்கிறது சிலப்பதிகாரம். மாதவி அட்சய பாத்திரத்தில் எல்லோருக்கும் உணவு கொடுக்கிறாள். அவரை உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவருக்கு சமம் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். இந்த மழைநீர் பொய்த்துவிட்டது என்றால் உயிர் இழப்பதற்கு வேறு காரணமே தேவையில்லை. எனவே இந்த மழைநீர் நமக்கு உயிரை கொடுக்கிறது எனலாம்.

வேதாகமத்தில் இறைவனின் தண்டனையாக மழை நிறுத்தி வைக்கப்பட்டது. எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் பொய்த்தது: நாடெங்கும் பெரும் பஞ்சம் உண்டானது. லூக் 4:25. இயற்கையில் உறைந்திடும் இறைவனை அழியாமல் பாதுகாத்தால் இயற்கை நம்மை பாதுகாக்கும். வானம் பொய்க்காது. நம்மால் இயற்கையை காக்க இயலாவிடில் இயற்கை நம்மை காப்பது கடினம்.

மழை பெய்தால் உணவு விளையும் உணவு கிடைத்தல் உயிர்கள் வாழலாம். உயிர் வாழ உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவர் ஆவார். உணவை காலம் தாழ்த்தி கொடுத்தால் அதனால் பயன் ஒன்றுமில்லை என்பதை அணிலின் கதை நன்கு விளக்குகிறது. உணவுக்கு ஆதாரமாகும் மழை காலம் தாழ்த்தி வந்தாலும் அதனால் பயனில்லை.



# வத்திக்கான் செய்திகள்

கேமரூனில், நிசாங் என்ற ஆங்கிலம் பேசும் மக்கள் வாழும் கிராமத்தில் இருந்த புனித.மரியன்னையின் ஆலயத்தை துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் தீயிட்டுக் கொளுத்தியதோடு ஐந்து குருக்களையும் ஒரு கன்னியாஸ்திரியையும், உபதேசியார், சமையல்காரர், மற்றும் ஒரு இளம் பெண்ணையும் கடத்திச் சென்றுவிட்டார்கள். பிறகு, அப்பகுதி ஆயரைச் சந்தித்து. அவர்களை விடுவிக்கப் பெரும் பிணைத்தொகையைக் கேட்டிருக்கின்றார்கள். ஆனால் ஆயர் குழுவின் தலைமை ஆயர், அவர்கள் கேட்கும் பிணைத்தொகையை கொடுக்கப்போவதில்லை. அவ்வாறு நாம் கொடுத்தால், அது ஒரு முன்னுதாரணமாகிவிடும். மேலும், அது பல கடத்தலுக்கு வழியாக அமைந்துவிடும் என்று கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் சமீபத்தில், முகமதுநபிகளை அவதூறாகப் பேசியதாக, சிறையில் அடைக்கப்பட்ட 57 வயதான அன்வர் மாஷி அவர்களுக்கு பிணையானது மறுக்கப்பட்டுள்ளது. அவர் தன் சொந்தக் குடும்பத்தாருடன் விவாதித்ததை, தவறாக சித்தரித்து, துஷ்பிரயோக சட்டத்தின் அடிப்படையில் அவர் குற்றம் சாற்றப்பட்டுள்ளது, மிகவும் தவறானது. அவர் தவறாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார் என்று நீதியின் குரல் என்ற அமைப்பின் தலைவர் திரு.ஜோசப் ஜென்சன் கூறுயுள்ளார்.

பங்களாதேஷில், டாக்காவின் அருகில் உள்ள காசிப்பூர் என்ற மாவட்டத்தில், குசிலாபாரி என்ற இடத்தில், இயேசு சபையையினர், புனித சேவியர் அகிலஉலக பள்ளியைத் துவக்கியுள்ளனர். இது கொரொனா பெருந்தொற்றினால், கடந்த இரண்டு ஆண்டுகளாக தள்ளிப் போனது. அந்தப் பள்ளியின் விருவாக்கு என்னவென்றால், ஒரு நெருப்பு மற்றொரு நெருப்பை எற்றிவைக்கும் என்பதாகும். தற்போது அந்தப் பள்ளியில் 34 குழந்தைகள் படிக்கின்றார்கள். அது 600 மாணவர் வரை படிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் 19ம் தேதியன்று நேபாலில் பெய்த கடும் மழையாலும், அதனால் ஏற்பட்ட நிலச்சரிவினாலும், ஏறக்குறைய 50 பேர் இறந்திருக்கக் கூடும் என்று அரசு வட்டாரங்கள் அறிவித்துள்ளது.

மேலும் மேற்கு நேபாலில் நிலச்சரிவில் 22 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் 100 வீடுகளுக்குமேல் மண்ணில் புதைந்துள்ளன என்று போலீஸ் அதிகாரி நாராயண் டாங்கி அவர்கள் ஆஎஃப்பி செய்தியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

வடவியட்நாமைச் சேர்ந்த கத்தோலிக்கர்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு புனித.சூசையப்பர் ஆலயத்தைக் கட்டியுள்ளனர். அது சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில் ஆயர்களும், நூற்றுக் மேற்ப்பட்ட குருக்களும், இறைமக்களும் கலந்து கொண்டனர்.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 27-ம் ஞாயிறு - 02.10.22

### 02.10.2022 – ஞாயிற்றுக்கிழமை

முதல் வாசகம் : அபாகூக் 1:2-3, 2:2-4
இரண்டாம் வாசகம் : 2 திமொத்தேயு 1:6-8, 13-14
நற்செய்தி : லூக்கா 17:5-10

### 03.10.2022 – திங்கட்கிழமை

முதல் வாசகம் : கலாத்தியர் 1:6-12
நற்செய்தி : லூக்கா 10:25-37

### 04.10.2022 – செவ்வாய்கிழமை

*புனித அசிசி பிரான்சிஸ் விழா*
முதல் வாசகம் : கலாத்தியர் 1:13-24
நற்செய்தி : லூக்கா 10:38-42

### 05.10.2022 – புதன்கிழமை

முதல் வாசகம் : கலாத்தியர் 2:1-2, 7-14
நற்செய்தி : லூக்கா 11:5-13

### 06.10.2022 – வியாழக்கிழமை

முதல் வாசகம் : கலாத்தியர் 3:1-5
நற்செய்தி : லூக்கா 11:5-13

### 07.10.2022 – வெள்ளிக்கிழமை

*புனித ஜெபமாலை அன்னை திருவிழா*
முதல் வாசகம் : கலாத்தியர் 3:22-29
நற்செய்தி : லூக்கா 11:27-28

### 08.10.2022 – சனிக்கிழமை

முதல் வாசகம் : கலாத்தியர் 3:22-29
நற்செய்தி : லூக்கா 11:27-28



**“Sanctify yourself and you will sanctify society.”**

- Francis Of Assisi



# திருவிவிலியமும் திருக்குறளும்
## வழங்கும்
# ஆன்மீகச் சிந்தனை




**இன்மையுள் இன்மை விருந்தொரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.**

அதிகாரம் 16
பொறையுடைமை
குறள் - 153

**பொருள்:** வறுமையுள் வறுமை விருந்தினரைப் போற்றாமல் நீக்குதல்; வல்லமையுள் வல்லமை என்பது அறிவிலார் தீங்கு செய்தலைப் பொறுத்தலாகும்.

செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட
ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது
(மத்தேயு நற்செய்தி 19:24)

பொதுவாக உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளை வறுமையின் எல்லையாகக் கொண்ட போதிலும் தற்காலத்தில் கல்வி மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் போன்றவை அற்றுப்போதல் வறுமை என கருதப்படுகிறது. இதற்கான எல்லைகள் மென்மேலும் விரிவடைகிறது எனலாம். மேலும் வறுமை என்பதை குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை அடைய முடியாத நிலை என சுருக்கமாக சொல்லலாம். அதாவது வறுமை என்பது உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, குடிமக்களிடம் மதிப்பு பெறுதல் போன்றவை உட்பட்ட வாழ்க்கைத்தரத்தை தீர்மானிப்பதை இழந்த நிலை ஆகும்.

இக்குறளில் இல்லாமலிருப்பதுதான் வறுமைநிலை என்று திருவள்ளுவர் குறிப்பிடவில்லை. எல்லா வளங்கள் இருந்தும் பிறருக்கு உதவாமல் இருப்பதுதான் வறுமைநிலை என்கிறார்.

செல்வந்தன் ஒருவன் அனைத்துச் செல்வ வளங்களையும் பெற்றிருந்தான். ஆனால் பசியால் வாடும் ஒரு மனிதனுக்கு கூட உதவ அவனுக்கு மனம் இல்லை. பிறருக்கு உதவாத நிலையும் வறுமை என்றாகிறது.

கர்வமும், கருமித்தனமும் ஒருவனுக்கு இருந்தால் அவன் பெற்ற செல்வத்தால் யாது பயன்? இந்த செல்வந்தன் உதவவில்லை என்று மட்டும்தான் விவிலியத்தில் வாசிக்கிறோம். மற்றபடி வேறு எந்தவிதமான சாவான பாவமோ பத்து கட்டளைகளை மீறியதாக அவன்மீது குற்றம் சாட்டப்படவில்லை. இருப்பினும் உதவாத குணமே ஆக்கினை தீர்ப்புக்கு அவனை உள்ளாக்கியது.

செல்வந்தன் என்பதெல்லாம் இவ்வுலக மனித வாழ்விற்கு மட்டும்தான். ஆனால் பரலோகம் இவற்றையெல்லாம் அனுமதிப்பதில்லை. தன்னை நேசிப்பது போல பிறரையும் நேசி என்பதுதான் இயேசு நமக்கு கற்பித்த இரண்டாவது கட்டளை. அதன்படி நட்புகளும், உறவுகளும் இருக்க வேண்டும்.

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

உடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல நண்பனுக்குத் துன்பம் வந்த போது உடனே சென்று அத்துன்பத்தைப் போக்குவதே சிறந்த நட்பு என்பதைப்போல பிறருக்கு உதவ வேண்டும். இதுவே மனிதனுக்கு இறைவன் அளித்த மாபெரும் கட்டளை.

இறைவன் மனமிரங்கி ஒருவருக்கு செல்வத்தை வாரி வழங்குவது போல அச்செல்வந்தரும் மனமிரங்கி மற்ற மனிதனுக்கு உதவ வேண்டும் என்பதைதான் இறைவன் விரும்புகிறார்.

யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என வாழ்வதுதான் மனிதருக்கு அழகு. இல்லையெனில் எந்த நன்மையும் இல்லாத இடமான நரகத்தில் பன்மடங்கு துன்பத்தை அடைவான் என்பதை நற்செய்தி நமக்குக் கூறுகிறது

செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார்.

இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. அவர் அச்செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார். அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும். அந்த ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது அண்ணாந்து பார்த்துத் தொலையில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார். அவர், தந்தை ஆபிரகாமே எனக்கு இரங்கும்; இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச்செய்ய அவரை அனுப்பும். ஏனெனில் இந்தத் தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன் என்று உரக்கக் கூறினார். அதற்கு ஆபிரகாம், மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய்; அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக் கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார்; நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய்.

அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. ஆகையால் இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது என்றார். அவர், அப்படியானால் தந்தையே, அவரை என் தந்தை வீட்டுக்கு அனுப்புமாறு உம்மிடம் வேண்டுகிறேன். எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனை மிகுந்த இந்த இடத்திற்கு வராதவாறு அவர் அவர்களை எச்சரிக்கலாமே என்றார். அதற்கு ஆபிரகாம், மோசேயும் இறைவாக்கினர்களும் அவர்களுக்கு உண்டு. அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும் என்றார். அவர், அப்படியல்ல, தந்தை ஆபிரகாமே இறந்த ஒருவர் அவர்களிடம் போனால் அவர்கள் மனம் மாறுவார்கள் என்றார். ஆபிரகாம், அவர்கள் மோசேக்கும் இறைவாக்கினருக்கும் செவிசாய்க்காவிட்டால் இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து அவர்களிடம் போனாலும் நம்பமாட்டார்கள் என்றார். (லூக்கா நற்செய்தி 16:19-31)

அடுத்ததாக வல்லமையில் வல்லமை என்பது அறிவிலார் தீங்கு செய்தலை பொறுத்தலாகும்.

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை

இழைத்த தீங்கு எண்ணியிருந்த நிலைத்த

பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்

நகைகெட வாழ்வது நன்று.

அதன் விளக்கம் யாதெனில்....

1. பிறர் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுதல் பெருமை.

2. பிறர் செய்த தீங்கை எண்ணிக் கொண்டிருத்தல் சிறுமை.

3. ஒருவர் செய்கொண்ட பகைமை கெடும்படி வாழ்தல் நன்று.

4. பல பொருட்செல்வம் உடையவர் நகைக்காமல் இருக்கும்படி வாழ்தல் நன்று.

5.நல்லவர்கள் நகைக்காமல் இருக்கும்படி வாழ்தல்நன்றுஎன்று சிறு பஞ்சமூலம் கூறுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அறிவில்லாத மனிதர்களாகிய நம் தீங்குகளை மன்னித்ததால் சிலுவை சாவை ஏற்றுக் கொண்டு நம்மை மீட்டெடுத்தார். இதுவல்லவோ வல்லமையில் வல்லமை!!!!

ஆண்டவரின் சொந்தப் பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் ஒவ்வொருவரும் அவர் விருப்பப்படி வாழ்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

*இயேசுவுக்கே புகழ்*

– லீமா விக்டோரியா

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்